இனிமையான குழந்தைகளே! புத்திசாலியாகி, எங்கு சேவை இருந்தாலும் செய்து கொண்டே இருங்கள். தந்தையின் அறிமுகம் கொடுங்கள். சேவையில் ஆர்வம் கொள்ளுங்கள்.

கேள்வி: குழந்தைகளின் புத்தியில் எந்த ஒரு விஷயம் வந்து விட்டது என்றால், தங்களுடைய அனைத்தையும் பயனுள்ளதாக செய்துக்கொள்ள முடியும்?

பதில்: இப்பொழுது இவை அனைத்தும் முடிந்து விடப் போகிறது. இரண்டு தானிய மணி கொடுப் பதால் தந்தை மூலமாக மாளிகை கிடைக்கிறது. யாருடைய புத்தியில் இந்த விஷயம் வந்து விடு கிறதோ, அவர்கள் தங்களுடைய அனைத்தையும் ஈஸ்வரிய காரியத்தில் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள். ஏழைகள் தான் சமர்ப்பணம் ஆகிறார்கள். தந்தை வள்ளல் ஆவார். அவர் உங்களுக்கு சொர்க்கத்தின் அரசாட்சி தருகிறார், தான் எதுவுமே பெறுவதில்லை.

பாடல்: அன்பரே வந்து சந்தியுங்கள்.. .. ..

ஓம் சாந்தி. அன்பிற்குரியவர்கள் அதாவது பக்தைகள், ப்ரைட்ஸ் அதாவது மணமகள்கள். பக்தைகள் அன்பரை அதாவது மணமகனை அழைக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் அனைவரும் சேர்ந்து கூப்பிடுகிறார்கள் என்றால் அவசியம் அன்பிற்குரியவர்களுக்கு யாரோ அன்பர் இருக்கிறார் என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது. ஹே பரமபிதா, பரமாத்மா வாருங்கள் என்று அனைவரும் ஒருவரைக் கூப்பிடுகிறார்கள். நாங்கள் உங்களை நிறைய நினைவு செய்கிறோம். நினைவார்த் தமோ அநேகருக்கு அமைக்கிறார்கள். இப்பொழுது அவை அனைத்துமே மனிதர்களின் நினைவார்த் தங்கள் ஆகும். இலட்சுமி நாராயணர், இராமர் சீதை ஆகிய தேவதைகளை நினைவு செய்பவர்கள் கூட நிறைய பேர் இருக்கிறார்கள். ஏனெனில், மனிதர்களை விட தேவதைகள் உயர்ந்தவர்கள். அதனால் தான் மனிதர்கள் தேவதைகளுக்கு பூஜை செய்கிறார்கள். வரிசைக்கிரமமாக உயர்ந்த வர்கள் மற்றும் தாழ்ந்தவர்களாக இருக்கவே இருக்கிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று பகவானுக்கு கூறப்படுகிறது என்பதை அனைவரும் அறிந்துள்ளார்கள். பிறகு இருப்பது பிரம்மா, விஷ்ணு, சங்கரன். அதன் பிறகு இருப்பது பிரம்மா மற்றும் ஜகதம்பா. இவர்கள் முக்கியமான வர்கள் ஆவார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த பாபா மூலமாக நமக்கு உயர்ந்ததிலும் உயர்ந்த ஆஸ்தி கிடைக்கிறது என்பது குழந்தைகளினுடைய புத்தியில் மட்டுமே உள்ளது. ஆனால் அந்த தந்தையை அறியாமலேயே இருக்கிறார்கள். தந்தை வரும் பொழுது தான் தனது அறிமுகத்தை அளிக்கிறார். குழந்தைகளாகிய உங்களைத் தவிர நான் யாரையுமே சந்திக்க முடியாது என்று தந்தை கூறுகிறார். நிறைய பேர் வருகிறார்கள். மகாத்மாஜீயை சந்திக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இங்கு அந்த விஷயமே கிடையாது. இங்கு தந்தை மற்றும் குழந்தைகளின் சம்பந்தம் உள்ளது. மற்றபடி யாருக்காவது ஏதோ வேலை இருக்கிறது என்றால் அது வேறு விஷயமாகும். தந்தை முரளி கூட குழந்தைகளுக்கு முன்னால் தான் நடத்துகிறார். அவர் அனைவருக்கும் தந்தை ஆவார் என்பதை கண்காட்சியில் கூட நீங்கள் நிரூபித்துக் கூறுகிறீர்கள். அவர்கள் அவர் பெயர் ரூபத்திற்கு அப்பாற் பட்டவர் ஆவார் என்று கூறுகிறார்கள். அவருக்கு பெயரும் உள்ளது,

ரூபமும் உள்ளது, தேசமும் உள்ளது, உருவ படமும் உள்ளது என்று நீங்கள் கூறுகிறீர்கள். அவரை அழைக்கவும் செய் கிறார்கள். எனவே எப்படி ஆத்மாக்கள் வருகிறார்களோ, அதே போல பரமாத்மா கூட வருகிறார். சிவனின் கோவிலில் கூட எருதைக் காண்பிக்கிறார்கள். அதற்கு நந்தி வாகனம் என்று கூறு கிறார்கள். எனவே சிவ பரமாத்மா வருகிறார் என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது. பிறகு ஏன் அவர் வரவே முடியாது என்று கூறுகிறார்கள். மனிதர்கள் எவ்வளவு முட்டாளாக இருக்கிறார்கள். எருதின் புருவமத்தியில் சிவனைக் காண்பிக்கவும் செய்கிறார்கள். பரமாத்மா கூட உண்மையில் புருவமத்தியில் இருக்கிறார். பகவான் கூட வர வேண்டி இருக்கிறது. எனவே அவசியம் புருவ மத்தியில் தான் வருவார். நந்தி வாகனம் என்று எதற்கு கூறப்படுகிறது என்பதைக் கூட இப்பொழுது கண்காட்சியில் நீங்கள் புரிய வைக்கலாம். நான் குழந்தைகளுக்குத் தான் புரிய வைக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். மனிதர்கள் காட்ஃபாதர் என்று கூறுகிறார்கள். ஆனால் ஃபாதரின் பெயர் என்ன என்றால், யாராலும் கூற முடியாது. லௌகீக தந்தையின் பெயரை உடனே கூறி விடுவார்கள். சிவபாபாவின் பெயரைக் கூட ஏராளமானோர் வைத்துக் கொண்டுள்ளார்கள். உண்மையில் பெயர் ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். தந்தை தான் இந்த எல்லா விஷயங்களையும் தெளிவுபடுத்து கிறார். மனிதர்கள் இச்சமயத்தில் இழிவான புத்தியுடையவர்களாக ஆகி உள்ளார்கள். தந்தையை (அல்ஃப்) அறியாமல் உள்ளார்கள். வேத சாஸ்திரங்கள் ஆகியவை படிப்பது எல்லாமே பக்தி மார்க்கம் ஆகும். பக்தியினால் பகவான் கிடைப்பார் என்று நினைக்கிறார்கள். பக்தர்கள் கூட மனிதர் களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அவசியம் பகவான் கிடைப்பார், ஆனால் எப்பொழுது கிடைப்பார். இது யாருக்குமே தெரியவே தெரியாது. பக்தி மார்க்கத்தில் யாருக்காவது சாட்சாத் காரம் (காட்சி தெரிதல்) ஏற்பட்டால், பகவான் கிடைத்து விட்டார் என்று நினைக்கிறார்கள். இதனால் முக்தியை அடைந்து விட்டோம் - ஏனெனில், பகவான் கிடைக்கும் பொழுது முக்தி தான் அளிக்கிறார். அவர் இருப்பதே முக்தி மற்றும் ஜீவன் முக்தி அளிக்கும் வள்ளலாக. பதீதர்களை (தூய்மை யற்றவர்களை) பாவனமாக ஆக்குபவர். துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர்.

தந்தை இருப்பதே வள்ளலாக. இரண்டு தானிய மணிகளுக்குப் பதிலாக மாளிகையை கொடுத்து விடுகிறார். முழு சொர்க்கத்தின் அரசாட்சியையே அளித்து விடுகிறார். இப்பொழுது எல்லாமே அழிந்து விடப் போகிறது என்று பாபா கூறுகிறார். இக்காரணத்தினால் இந்த ஈஸ்வரிய காரியத்தில் ஈடுபடுத்தி பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டு விடுங்கள். உங்களுக்கு பதிலுக்கு வருங்காலத்தில் கைமாறாக கிடைக்கும். செல்வந்தர்கள் யாரும் தந்தையை அடைய முடியாது. சமர்ப்பணம் ஆகி விட முடியாது. ஏழைக் குழந்தைகள் தான் சமர்ப்பணம் ஆகிறார்கள். யாராவது புத்திசாலியாக இருந்தார் என்றால் வழியில் போகும் பொழுது கூட சேவை செய்ய முடியும். போய்க் கொண்டி ருக்கும் போதே முதலில் யாருக்காவது நண்பனாக ஆகி விட வேண்டும். பிறகு அமர்ந்து ஞானம் கூற வேண்டும். ஞானம் முற்றிலுமே சுலபமானது. பரமபிதா பரமாத்மாவின் பெயரை எப்பொழுதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா என்று மட்டுமே கேளுங்கள். எவ்வளவு முதல் தாமான விஷயமாகும். பரமபிதா என்று கூறுவதால் அவர் அனைவருடைய தந்தையாகி விடு கிறார். எப்படி தேள் மென்மையான பொருளைப் பார்க்கும் பொழுது அங்கு பார்த்து கொட்டி விடும். நீங்களும் இதே தொழில் செய்யுங்கள். அனைவருக்கும் இராஜயோகம் கற்றுக்

கொடுங்கள். அப்பொழுது சத்யுகத்தில் இளவரசர் இளவரசி ஆவீர்கள். அங்கு உங்களுக்கு (அழகிய) தூய்மை யான குழந்தைகள் கிடைப்பார்கள். எனவே தந்தையிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும் என்பதை புரிய வைக்க வேண்டும். இதில் எல்லாமே புத்தியினுடைய விஷயமாகும். மற்றபடி சாட்சாத்காரம் சாதாரண விஷயமாகும். ஒருவருக்கு எப்படியோ சாட்சாத்காரம் ஆகிறது. மற்றொருவருக்கு எப்படியோ.. .. ஆகிறது. அது கூட இலட்சியம், நோக்கத்தைக் கூறுவதற்காக ஆகிறது. என்னை நினைவு செய்தீர்கள், மேலும் தூய்மையாக இருந்தீர்கள் என்றால், இது போன்ற பதவியை அடைவீர்கள் என்று பாபா கூறுகிறார். இருவரும் சேர்ந்து இருந்து பதவியை அடைவது - இது தான் பெரிய குறிக்கோள். மற்ற சகவாசம் அறுபட்டு விட வேண்டும். ஒருவரிடம் தொடர்பு இணைந்து விட வேண்டும் - இதில் தான் உழைப்பு தேவைப்படுகிறது. சந்நியாசிகள் அனைத்தையும் விட்டு விட்டு சென்று விடுகிறார்கள். இங்கு (இருவரும்) கணவன் மனைவி சேர்ந்து இருந்து கொண்டு, இந்த பழைய உலகம் முடிந்து போய் விட்டது என்பதை புத்தியிலிருத்திக் கொள்ள வேண்டும். நாம் திரும்பிச் செல்ல வேண்டும். பிறகு நாம் சொர்க்கத்திற்குச் சென்று ஆட்சி புரிவோம். இப்பொழுது பழைய உலகத்தின் விநாசம் ஆகவே வேண்டி உள்ளது. இதை புத்தியிலிருத்தி முயற்சி செய்ய வேண்டும். 8 மணி நேரம் இந்த நினைவின் சேவையில் இருங்கள். அது எப்படி முடியும் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். பக்தி மார்க்கத்தில் கிருஷ்ணருடைய பக்தர்களாக இருப்பவர்கள் கூட அனைத்து பக்கங்களிலிருந்தும் புத்தியை அகற்றி ஒரு கிருஷ்ணரைத் தான் நினைவு செய்துக் கொண்டிருப்பார்கள். ஒருவர் இராமரின் பக்தராக இருப்பார். நல்லது. இராமரை நினைவு செய்யுங்கள். இராமரின் இராஜதானியை நினைவு செய்யுங்கள். அவ்வாறு நிரந்தரமாக நினைவு செய்தார்கள் என்றால், அந்த் மதி சோ கதி - கடைசியில் புத்தி எவ்வாறோ அவ்வாறே கதியும் ஆகும். இராமரை நினைவு செய்து இராமரின் இராஜதானிக்குச் செல்ல வேண்டும் என்றால், அது கூட உழைப்பாகும். இப்பேர்ப்பட்ட உழைப்பைக் கற்றுத் தருபவர் வேறு யாருமில்லை. கடைசி நேரத்தில் மனைவியை நினைவு செய்தார் .. .. .. என்று சுலோகம் கூட உள்ளது. ஒரு வேளை யாராவது சந்நியாசியாக இருக்கிறார், குருவாக இருக்கிறார் என்றால் அவரையும் நினைவு செய்ய வேண்டி இருக்கும். அப்பொழுது அந்த் மதி, சோ கதி - கடைசியில் புத்தி எவ்வாறோ அவ்வாறே பிந்தைய கதியுமாகி விடும். எங்கு செல்ல விரும்புகிறீர்கள் என்று முதலில் கேளுங்கள். திரும்பிச் செல்ல வேண்டும். ஆனால் எங்கே? ஏனெனில் பக்தியில் ஒரு பக்கம் புத்தியை ஈடுபடுத்த கூடிய வகையில் சக்தி கிடைப்பதில்லை. சர்வசக்திவான் ஒரு பரமபிதா பரமாத்மா தான் ஆவார் அல்லவா? அவருடையது தான் பாகம் பொருந்தி உள்ளது. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் தந்தை ஆவார். அவரை நினைவு செய்தீர்கள் என்றால், அவருடைய தேசத்திற்குச் சென்று விடுவீர்கள். சந்நியாசிகளுக்கு தேவதை என்று கூட கூற முடியாது. அவர்கள் துவாபரத்தில் தான் வருகிறார்கள். குழந்தைகளே என்னை நினைவு செய்யுங்கள் என்று சுயம் பகவான் வந்து கூறுகிறார். மேலும் சிருஷ்டிச் சக்கரம் பற்றி கூட புரிய வைக்கிறார். அதன் மூலம் நீங்கள் சக்கரவர்த்தி இராஜா ஆகி விடுவீர்கள். இந்த ஞானத்தை தந்தை தான் புரிய வைக்கிறார். படங்கள் மீது நீங்கள் புரிய வைக்கலாம். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் நிராகார பகவான் ஆவார். அவர் மூலவதனத்தில் இருக்கிறார். அவரும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். தேவதைகளாகிய நாம் கூட அங்கு தான் இருக்கிறோம். சூட்சும வதனத்தில் சூட்சும தேவதைகள் இருக்கிறார்கள். அங்கு சிருஷ்டியின் சக்கரம் இல்லை.

பிறகு கீழே வந்தீர்கள் என்றால் இலட்சுமி நாராயணரின் கோவிலில் எல்லா வற்றையும் விட அதிகமான ஆடம்பரம் உள்ளது. ஜகதம்பா ஜகத்பிதாவின் கோவிலில் அவ்வளவு ஆடம்பரம் இருப்பதில்லை. ஜகதம்பாவிற்கு முற்றிலும் சாதாரண கோவில் தான் இருக்கிறது. நீங்கள் இலட்சுமியின் கோவிலைப் பாருங்கள். ஜகதம்பாவினுடைய கோவிலையும் பாருங்கள் - ஆக இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கும். ஜகதம்பா தான் இலட்சுமி ஆகிறார் என்பது மனிதர்களுக்குத் தெரியவே தெரியாது. இவரும் மிகச் சாதாரணமாக இருக்கிறார். எனவே அவருடைய கோவில் கூட மிகவும் சாதாரணமாகத் தான் அமைத்துள்ளார்கள் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எனவே படங்களைக் கூட சாதாரணமாக அமைத்திருக்கிறார்கள். ஜகதம்பாவை சில இடங்களில் கருப்பாகவும் அமைக்கிறார்கள். சங்கமத்தில் நாம் இந்த இராஜயோகத்தைக் கற்றுக் கொண்டு வருங்காலத்தில் எவ்வளவு அழகான ஸ்ரீ இலட்சுமி ஸ்ரீ நாராயணர் ஆகிறோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். பிரம்மா மூலமாக ஸ்தாபனை என்றும் எழுதப்பட்டுள்ளது. அது ஞானத்தினால் தான் ஆகிறது. மற்றபடி பசுவினுடைய வாயிலிருந்து அமிருதம் போன்ற எந்த ஒரு விஷயமும் கூட கிடையவே கிடையாது. கிருஷ்ணருக்குக் கூட சங்கமத்தில் பாபா ஆஸ்தி அளிக்கிறார். சங்கமம் ஆன காரணத்தால் அவர்கள் சிவனுக்குப் பதிலாக கிருஷ்ணரினுடைய பெயரை எழுதி விட்டுள்ளார்கள். ஜகதம்பா தான் இலட்சுமி ஆகிறார். மேலும் இலட்சுமி தான் 84 பிறவிகள் எடுத்து ஜகதம்பா ஆகிறார் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். இது பிரம்மாவின் குலமாகும். அதுவே பிறகு தெய்வீக குலமாக ஆகிறது. தேவதா குலத்தினர் பிறகு 84 பிறவிகள் எடுக்கிறார்கள். பின் கடைசியில் வந்து சூத்திர குலத்தினராக ஆகிறார்கள். எவ்வளவு நல்ல நல்ல விஷயங்கள் ஆகும். தாரணையாகவில்லை என்றால் மந்த புத்தி என்று கூறுவார்கள். நிறைய சென்டர்களில் தாங்களே வகுப்பு நடத்தக் கூடியவர்களாகக் கூட இருக்கிறார்கள். கூர்மையான புத்தியுடைய மாணவர் ஆகுங்கள் என்று காட்ஃபாதர் கூறுகிறார். சேவை செய்யக்கூடிய குழந்தைகளை எவ்வளவு நினைவு செய்கிறார்கள். அழைக்கிறார்கள். தந்தை கூட அப்பேர்ப்பட்ட குழந்தைகளை நினைவு செய்கிறார். பள்ளிக் கூடத்தில் ஒரு சிலர் கூர்மையாக, வேறு சிலர் மந்தமாக இருக்கவே இருப்பார்கள். ஆனால் இருப்பது எல்லோருமே குழந்தைகள் தான். ஆனால் ஒரு சிலர் புண்ணிய ஆத்மாவாக ஆகவே முடியாமல் இருக்கிறார்கள். அவ்வளவு பாவங்கள் செய்திருக்கிறார்கள். அடிக்கடி விழுந்து விடுகிறார்கள். எவ்வளவு மறைமுகமான குஷி இருக்க வேண்டும். பாபா மட்டுமே குருடர்களின் கைத்தடி ஆவார். வேறு யாருமே ஆக முடியாது. ஹே பிரபுவே! குருடர்களின் கைத்தடி நீங்களே.. இங்கு ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஞானக் கண் இல்லாதவருக்கு குருடர் என்று கூறப்படுகிறது. கலியுகத்தின் இரவில் சிவபாபா வருகிறார். கிருஷ்ண இராத்திரி என்கிறார்கள். பின் சிவனுடையதும் இராத்திரியாகும். இப்பொழுது சிவன் பரமாத்மா ஆவார். அவருடைய இராத்திரி எது?

கலியுகத்தின் இறுதி மற்றும் சத்யுகத்தின் ஆரம்பத்திற்குத் தான் இரவு என்று கூறப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். பக்தி மார்க்கத்தில் அடி வாங்கி எல்லோரும் துன்பப்பட்டு விட்டார்கள். ஒன்று பரமாத்மாவிற்கு கரை காண முடியாது என்பார்கள் அல்லது நாமே பரமாத்மா ! என்பார்கள். எவ்வளவு புரிய வைக்கப்படுகிறது. ஒரு சிலருக்கு சேவையில் மிகுந்த ஆர்வம் இருக்கும்.

பாபாவிற்குக் கூட ஆர்வம் இருக்கிறது. ஆனால் பாபா எங்கேயாவது செல்வது என்பது நடைமுறை சட்டம் கிடையாது. சன் ஷோஸ் ஃபாதர் - மகன் தந்தையை வெளிப்படுத்துவார். குழந்தைகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஏராளமானோர் வந்து கொண்டே இருப்பார்கள். கியூ வரிசையில் வெளியில் அமர்ந்து விடுவார்கள். போப் வந்தார் என்றால், எத்தனை மனிதர்கள் வந்தார்கள். இவர் அனைவருடைய தந்தை ஆவார். போப்பிற்குக் கூட சத்கதி அளிப்பவர் ஆவார். உண்மையிலும் உண்மையான ஆசீர்வாதம் அளிப்பவர் தந்தையே ஆவார். அவர்கள் பொய்யான ஆசீர்வாதம் தருகிறார்கள். பி.கே்க்களோ அனைவருக்கும் ஆசிகள் அளிக்க வேண்டியுள்ளது. புரியாத காரணத்தினால் நாங்கள் ஆசீர்வாதம் அளிக்கிறோம் என்று நினைக்கிறார்கள். இங்கு வருகிறார்கள் - ஆசிகள் பெறுவதற்கு தகுதியுடையவர்களா, இல்லையா என்பது பார்க்கப்படுகிறது. பரமபிதா பரமாத்மாவின் புத்தியில் என்ன இருக்கிறதோ, அது யாருடைய புத்தியிலும் இல்லை. இவர்கள் வந்தால் யாம் இவர்களுக்கு முக்தி ஜீவன் முக்தி கொடுப்போம் என்று தந்தை கூறுகிறார். மனிதனை தேவதை ஆக்கி விடுவேன். சொர்க்கத்தின் நாற்று நடப்பட்டேயாக வேண்டி உள்ளது. எந்தவிதமான நாற்று நடப்பட்டு கொண்டு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொண்டு விடுவோம். யார் வந்தாலும் முக்தி ஜீவன் முக்தி கொடுக்க வேண்டும் என்று நீங்களும் புரிந்திருங்கள். எங்களுக்கு முக்தி வேண்டும் என்பார்கள். நல்லது. முக்தி தாமத்தை நினைவு செய்தீர்கள் என்றால் முக்தி கிடைக்கும். தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால், அந்த் மதி சோ கதி ஆகி (கடைசியில் புத்தி எவ்வாறோ அவ்வாறே கதி) விடும். நல்லது

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. குறைந்தது 8 மணி நேரம் இந்த நினைவின் சேவையில் இருக்க வேண்டும். ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் பொழுது கூட மற்ற தொடர்புகளை விடுத்து ஒருவரிடம் தொடர்பை இணைத்துக் கொள்ளும் முயற்சி செய்ய வேண்டும்.

2. கூரிய புத்தி உடைய மாணவர் ஆக வேண்டும். மந்த புத்தி உடையவராக இருப்பது அல்ல. தந்தைக்குச் சமமாக குருடர்களின் கைத்தடி ஆகி அனைவருக்கும் முக்தி ஜீவன் முக்தியின் வழியைக் கூற வேண்டும்.

வரதானம் : குறுகிய காலத்தின் ஆதாரவிலிருந்து விடுபட்டு பாபாவை துணையாக மாற்றிக் கொள்ளக்கூடிய யதார்த்த முயற்சியாளர் ஆகுக.

குறுகிய காலத்தின் ஆதாரங்களின் துணைகளிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இந்த குறுகிய காலத்தின் ஆதரவுகளிலிருந்து இப்பொழுது விடுபடுங்கள். எந்தளவு இதில் இருக்கிறீர்களோ அதுவரை எப்பொழுதும் பாபாவின் ஆதரவை அனுபவம் செய்ய முடியாது. மேலும் பாபாவின் ஆதரவு இல்லாததால் எல்லைக்குட்பட்ட ஆதரவை உருவாக்கிக் கொள்கிறீர்கள். குறுகியகால விஷயங்கள் ஏமாற்றக்கூடியவை, ஆகையால் நேரத்தின் வேகத்தைப் பார்த்து இப்பொழுது இந்த எல்லைகுட்பட்டதிலிருந்து அதிவேகமாக பறந்து நொடியில் கடந்துச் செல்லுங்கள். அப்பொழுது

தான் உண்மையான முயற்சியாளர் என்று சொல்ல முடியும்.

சுலோகன்: கர்மம் மற்றும் யோகத்தில் சமநிலை வைப்பது தான் வெற்றி அடைந்த கர்மயோகி ஆவதாகும்.